1517

1517
14.22

20 DEC 1922

உ

சிவமயம்.

சாலிச் சந்தை,

கருணையானந்த சுவாமிகள் மீது,

கருணையானந்த மாலை.

இஃது

விருதுபட்டி, சங்கீதசாகித்ய வித்துவான்

மகா-ா-ா-ஸ்ரீ,

அ. கந்தசாமிக் கவிராயர்.

அவர்களால் இயற்றப்பெற்று,

சாலிச்சந்தை வாசியும், தூத்துக்குடி

வர்த்தகருமாகிய மகா-ா-ா-ஸ்ரீ

வாலசுப்பிரமணிய நாடாரவர்கள்,

பொருளுதவிகொண்டு,

விருதுபட்டி ஸ்ரீமான்,

... லிங்கக்குருக்களவர்களது,

... அச்சியந்திரசாலையிற்

...க்கப்பெற்றது.

...922.

Q23:38.21955
N22
176288

உ

சிவமயம்.

20 DEC 1922
24379
1517

சாலிச் சந்தை,

கருணையானந்த சுவாமிகள் மீது,

கருணையானந்த மாலை

இஃது

விருதுபட்டி, சங்கீதசாகித்ய வித்துவான்

மகா-௱-௱-ஸ்ரீ,

அ. கந்தசாமிக் கவிராயர்,

அவர்களால் இயற்றப்பெற்று,

சாலிச்சந்தை வாசியும், தூத்துக்குடி

வர்த்தகருமாகிய மகா-௱-௱-ஸ்ரீ

வாலசுப்பிரமணிய நாடா ரவர்கள்,

பொரு ளுதவிகொண்டு,

விருதுபட்டி ஸ்ரீமான்,

இராமலிங்கக்குருக்க ளவர்களது,

சச்சிதானந்த அச்சியந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பெற்றது.

1922.

சாத்துக் கவிகள்.

176288

விருதுபட்டி, ஸ்ரீமான்

இராமலிங்கக்குருக்களவர்கள் இயற்றிய

வெண்பா.

சந்ததமுந் தென்விருதைச் சண்முகனை யேதுதிக்குங்
கந்த சுவாமிக் கவிராசன் — செந்தமிழால்
மாகருணை யானந்த வள்ளலுக்கோர் மாலைசொற்றான்
பாகனைய சொல்லாற் பரிந்து.

பெருநாழி ஸ்ரீமான்,

ஆ. குமரய்ய நாடா ரவர்க ளியற்றியது.

சாலியூர்ச் சித்தி விநாயக நாடன்
தவமதாய்த் திருவிரு தூரார்
மாலிய லண்ணு மலையிடத் துதித்து
வளர்கவி வெள்ளமா யிசைப்பன்
னூலியல் கந்த சாமியி னிதைய
நோக்கினுக் கொளிர்திருத் தீபம்
போலிய லணங்கு பூரணத் தம்மாள்
பொற்புட னிதம்பணி தருவாம்,

ஆரண முடிவாம் ரகசியப் பொருளை
யறிவினாற் காணுமெஞ் ஞான
காரண மயமாய்ச் சாலியூ ரமருங்
கருணையா னந்தநற் பான்மேல்

வாரணங் கறங்குங் கடலெழு மமிர்தாய்
மதிகுணங் குலநல மமைந்த
பூரண முரிமை பெறுங் கந்தசாமி
புகன்றனன் புவியினின் மாதோ.

விருதுபட்டி க்ஷத்திரிய வித்தியாசாலை மானேஜிங் போர்டு
பிராஞ்சு, ஸரஸ்வதி வித்தியாசாலை, ஹெட்மாஸ்டர்.

தே. சு. சங்கரலிங்க நாடாரவர்கள்

இயற்றிய வெண்பா

நற்கருணை யானந்த ஞானகுரு சாமியிரு [ய்
பொற்கமலத் தாளிணையைப் போற்றிசெய்தே--அற்புதமா
கந்த சுவாமிக் கவிஞன்பா மாலைசொற்றன
சந்ததமுங் கொண்டாடத் தான.

விருதுபட்டி, மகா-ள-ள-ஸ்ரீ

சிவநதி நாராயண நாடாரவர்கள்

இயற்றிய வெண்பா,

சாலி நகர்க்கருணை யானந்த சாமியின்மேல்
நூலிசைத்தான் பாமாலை நுண்ணறிவால்—பாலினிய
சொற்கந்த சாமிச் சுகுண னவர்களுக்கும்
சற்கரைபோ லேயினிக்கத் தான்

சாத்துக் கவிகள் முற்றிற்று.

உ

சிவமயம்.

கருணையானந்த மாலை

காப்பு.

காவளஞ் சேர்சாலிக் கருணையா னந்தர்மிசை
பாவளஞ் சேர்மாலை பகரவே—நாவதனில் [தங்
வந்தினிய செஞ்சொல் வழங்குமெய்யோப்பொழு
தந்திமுகத் தெந்தைதிருத் தாள்.

திருத்தொண்டர் துதி

உலகுயிரெவையுந் தந்தே யொளிரொருபொருளைக் காணா
திலகிய வறிவுநீக்கி யியலற மாதியான
நலமெலா மருளிப்பூவி னிதர்களாக வைகும்
அலகிலாப் பெரியோர்தங்க ளடிமல ரிதையம்வைப்பாம்.

நூல்.

சீர்செழித்தோங்கச் செகஞ்செழித்தோங்க
சிவனடியவர் பதஞ்சேவிப்
போர்செழித்தோங்கப் புகழ்செழித்தோங்கப்
புண்ணியங்குடி வளர்சாலி

பூர்செழித்தோங்கப் பரசுகம்விரும்பும்
முயிரெனும்பயிர் செழித்தோங்கக்
கார்செழித்தோங்கப்பொழிதல்போற்பொழியும்
கருணையானந்த சற்குருவே (1)

எண்ணினுக்கடங்கா வேற்றமாய்ச்சிறிய
வெள்ளினுள் ளெண்ணைபோற்பெரிய
மண்ணினிற்சலத்தி லங்கியிற்காற்றில்
மற்றுள்ள சராசரந்தம்மில்
விண்ணினிற்கலந்து முகத்தின்மேற்றிகழும்
விழிகளுக்கொழிந்து மெஞ்ஞானக்
கண்ணினுட்டோன்றுங் கடவுளினடிசேர்
கருணையானந்த சற்குருவே. (2)

உருவினுமுருவா யொளியினுமொளிவா
யுயர்தவமுனிவரர் தேடும்
திருவினுந் திருவாய்த் தெளிவினுந் தெளிவாய்
தேனினுமினிய தெள்ளமுதாய்
மருவினுமருவாய் மதியினுமதியாய்
வயங்கியசோதியைத் தெரிந்து
கருவினுட்பிறவா வரந்தனையேற்குங்
கருணையானந்தசற்குருவே. (3)

மண்ணிலென்மனையை யாலயமெனவும்
மங்கையர்தெய்வமே யெனவும்
பண்ணிறைமொழியைச் சதுர்மறையெனவும்
பயோதரம்பாசுக மெனவும்
எண்ணியதல்லாற் பயனொன்றறியா
வேழையைக்காப்பவ ரெவர்சொல்
கண்ணிறைமலர்த்தண் பொழில்திகழ்சாலிக்
கருணையானந்த சற்குருவே (4)

புல்லியர்களைப்போய் புகழ்ந்துசேவித்தும்
பொன்னினையீட்டி மெய்விலைசெய்
வல்லியர்க்களித்து மனமிகக்களித்து
வறியவர் பெரியவர்தமக்கோர்
சல்லியமுதவா துறவினையகற்றிச்
சற்சனனாக வெனக்கருள்வாய்
கல்லியன்பனைத்தார் காணுதற்கரிய
கருணையானந்த சற்குருவே. (5)

உண்டுநான்புரிந்த பெருங்குறைபதனை
உண்மையா யுன்னியா னுரைக்கிற்
பண்டுநாள் வேதவியாதனே மொழிந்த
பாரதக் கதையென விரியும்

கொண்டுநீ பொறுத்து நினதடி நிழலிற்
கொடியனை யிருத்தியா தரித்தாள்
கண்டமா தவத்தோ ரனுதினந் துதிக்குங்
கருணையா னந்தசற் குருவே. (6)

அன்னநேர் நடையார் மின்னனே ரிடையார்
அமிழ்தினு மினியசொல் லுடையார்
சொன்னநேர் நிறத்தை தடித்தெழுந் தனத்தைத்
துதிப்பதே தொழிலதா யுடைய
என்னையாள் கடவுள் நின்னையே யல்லா
லெனைமுகண் டுய்யுமா றுளதோ
தன்னல்வாய் வயல்சூழ் சாலிமா நகர்வாழ்
கருணையா னந்தசற் குருவே. (7)

விண்ணுறுங் கதியே வெண்ணிற மதியே
மேலவர் தேடுநன் னிதியே
பண்ணுறும் பாவே பாவுறும் பயனே
பயனுணர்ந் தவருறுஞ் சுகமே
தண்ணுறு மமிர்தே சரணுறுந் தமியேன்
சகலமுந் தெரிந்திடப் பணித்த
கண்ணுறு மணியே கருத்துறுங் கருத்தே
கருணையா னந்தசற் குருவே. (8)

தாயிலாச் சிசுப்போ லுலகிடைத் திரிந்தே
சஞ்சல மடைந்திடுந் தமியேன்
நோயிலா திருக்கத் திருவருள் புரிவாய்
நுண்ணறி வுடையர்பே ரிதையங்
கோயிலா வமர்ந்து குணந்தரு மருந்தே
கூடிய வன்பர்கள் விருந்தே
காயிலாக் கனிவாய் கற்பகத் தருவே
கருணையா னந்தசற் குருவே (9)

சொற்பன மனைய வாழ்வினைப் பெரிய
சுகமென நினைந்துனை மறந்து
தற்புகழ் கருதித் திரிந்துநாட் கழித்தேன்
றுயினுக் கொழித்த சூழுளதோ
அற்பனென் றிகழ்ந்து விடுவையோ வெனை நீ
யாதரித் தருள்வையோ தெரியேன்
கற்பகப் பொழிற்செஞ் சாலிமா நகர்வாழ்
கருணையா னந்தசற் குருவே. (10)

பூவினம் பறித்து நின்றிரு வடிக்குப்
பூசனை புரிந்துகை குவித்து
நாவினுன் புகழைப் பேசுதற் கறியா
நாயினுங் கடையனே னாளாய்

பாவினங் கூறு மொழியெலாங் கேட்டுப்
பைங்கிளி பெடையினுக் குரைக்குங்
காவினஞ் செறிசெஞ் சாலிமா நகர்வாழ்
கருணையா னந்தசற் குருவே. (11)

நாயினுங் கடையே னுய்யுமா றறியேன்
நல்வழி யுணர்த்தியாண் டாயொன்
றாயினு மினியோய் தந்தையி லினியோய்
சகலசம் பத்தினு மினியோய்
சேயினு மினிதா யெனையுகந் தருள்வாய்
சீனியை விரவிய செழுந்தேங்
காயினு மினிய சுவைமொழிக் கரசே
கருணையா னந்தசற் குருவே. (12)

நஞ்சவேல் விழியார் மயக்கவே ரறுத்த
ஞானியே மோனியே யடியேன்
வஞ்சமா மறலி செய்யும் வேதனைக்கும்
வருமறு சென்னவா தனைக்கும்
நெஞ்சமா னதுசெந் தழல்மெழு கெனவே
நினைந்துரு கிடுவதால் நினது
கஞ்சமா மலர்த்தாள் தஞ்சமென் றடைந்தேன்
கருணையா னந்தசற் குருவே. (13)

நற்பணி விடைசெய் துன்றிரு வடிவை
நயப்பதை விடுத்துநங் கையர்க்குப்
பொற்பணி பூட்டி வியப்புறு மெனது
புல்லறிவகற் றியாண் டருள்வாய்
எற்பணி சொக்க ரினிதுவந் தமர்ந்த
விந்திர விமானவா லயம்போற்
கற்பணி திகழுங் கோயிலி லமர்ந்த
கருணையா னந்தசற் குருவே (14)

மருதநன் னிலஞ்சூழ் சாலியின் மன்னர்
மரபெனும பெரியபாற் கடலில்
ஒருதனி மதிபோற் றோன்றிநற் சாஸ்திர
வுணர்ச்சியாந் தோழரோ டிணங்கி
பொருதுவெங் காமக் குரோதமா மோகம்
புகலுலோ பம்முதற் கொய்ய
கருதல ரறுவர்தமைச் செயித் தொளிருங்
கருணையா னந்தசற் குருவே. (15)

நற்கனி ரசமே தீம்பசும் பாலே
ஞானவா ருதியெழு மமுதே
சற்கரைப் பாகே தெளிந்தசெந் தேனே
தவத்துளார் தேடுநற் றவமே

சொற்கலை மறையாஞ் சாணையிற் றேய்ந்து
சுடர்விடுஞ் சோதிமா மணியே
கற்கறை மொழியார் மயக்கவே ரறுக்குங்
கருணையா னந்தசற் குருவே. (16)

பெருவிழா நடத்தித் திருவிரதம் பூண்
பெரியவர் சிறியவ ரடையும்
அருவினை யெனும்வெம் பிணிக்குநன் மருந்தே
அஞ்சன வரையெனக் கிளம்பி
இருவிழி களுஞ்செந் தீப்பொறி சிதற
இடியிமிலா விடுமெய்ப் பயலின்
கருவம தடக்குஞ் சிவவடி வுடையோய்
கருணையா னந்தசற் குருவே. (17)

பூதநா யகனின் வடிவொடு கலந்த
புண்ணிய மூர்த்தியே யுனது
பாதநாண் மலரே துணையென வடையும்
பாலனைக் கடைக்கணித் தருள்வாய்
மாதர்காய் கறிகள் தாளிதஞ் செய்யும்
வாடையின் புகையெழு நாற்றுக்
காதமே கமழுஞ் சாலிமா நகர்வாழ்
கருணையா னந்தசற் குருவே. (18)

எந்தைநீ யெனக்கே மைந்தனு னுனக்கே
யிதற்கொ[illegible] வியாச்சியஞ் செய்யில்

76288 600 008

உந்தனின் வழக்கே தோல்வியா மெனக்கே
யுறுதியா மாதலா லென்னைச்
சந்தியிற் றள்ளி விடாதெடுத் தாண்டே
தண்ணருட் செல்வநீ யருள்வாய்
கந்தியஞ் சோலை வேலிசூழ் சாலிக்
கருணையா னந்தசற் குருவே. (19)

குவலைய மதனி லீன்றநற் றாயின்
கொங்கையிற் சுரந்திடு மமுதோர்
திவலை யில்லாது வறப்பினு விடுமோ
செங்கையும் வாயும்வைக் காமற்
சவலையாங் குழவி யப்படிப் போனின்
தயவென்பா லகலினு மகலேன்
கவலையை யொழிப்பாய் சிவதவ வடிவோய்
கருணையா னந்தசற் குருவே. (20)

முதிரவா வுடனே முத்தமிழ்ப் புலவர்
முக்கிய சொற்களாற் புனைந்த
மதுரவா சகமே மாற்றுயர் பொன்னே
மாணிக்கக் குவியலே மாறு
ததிருவா ரிதிரு மூவனியின் மாக்க
ளடைந்தவெம் பிணியெனும் பனிக்கோர்
கதிரவா வென்று கவலைதீர்த் தருள்வாய்
கருணையா னந்தசற் குருவே. (21)

முடிமிசை யணிந்த கொத்துமா மணியும்
முழுமதி யனையதண் முகமும்
படிகவெண் ணீறுர் மேனியு முடுத்த
பவளச்செங் காவியுஞ் செழும்பொன்
அடிகளி லணிபா துகையுமே யிலங்க
வடியன்முன் னெழுந்தருள் புரிவாய்
கடிகவழ் கமல வாவிசூழ் சாலிக்
கருணையா னந்தசற் குருவே. (22)

புனித வெண்ணீறு மக்குமா மணியும்
பூண்டருள் பெரியவர் நட்பே
மனித ரினுருக்கொண் டவனியில் வந்த
வரதனே யென்னையாட் கொள்வாய்
வனிதையர் மனையிற் பந்தடி பயில
மந்திகள் கண்டுநற் செழுமாங்
கனிபறித் தாடுஞ் சோலைசூழ் சாலிக்
கருணையா னந்தசற் குருவே. (23)

நினையனு தினமு மனதிலன் போடு
நினைந்திடு மடியவர் முன்செய்
வினையினு லடைந்த பிணிகளைச் சிறிய
மிளகினு லகற்றுமெய்ப் பொருளே
மனைதொறு மடவா ராடவ ருடனே
வாசிக்கும் வாசகத் தொனிகள்

கனைகட லொலியை மாற்றிடுஞ் சாலிக்
கருணையா னந்தசற் குருவே. (24)

ஞாலங்கள் பலவா யுறைந்துள மாந்தர்
நாடிய வறிவினுக் கமைந்த
கோலங்கள் பலவாய் நின்றருள் புரியுங்
கோலமாம் பிரமமு னிந்திர
சாலங்கள் தரணி வாழ்வென விகந்தே
சாலியாந் திருநக ரதனிற்
காலங்கள் பலவாய் நின்றினி தொளிருங்
கருணையா னந்தசற் குருவே (25)

நஞ்சன விழியா ராசையே கொண்டு
நாடொறு மவர்பினுற் றிரிந்து
உஞ்சிடுந் தகைமை யொன்றுமே காணு
துலைந்துமெய் யயர்ந்துளேன் கடைநாள்
வஞ்சக நமனார் தூதர்வந் தென்னை
வாதனை செயாதருள் புரிவாய்
கஞ்சமு மாம்ப லுஞ்செறி சாலிக்
கருணையா னந்தசற் குருவே. (26)

மின்னலிற் றோன்றும் வாழ்வினை நிசமாய்
வீணரை யனுதினம் புகழ்ந்து

பன்னலிற் போது போக்கிநின் றயர்வேன்
பராபர நிலைதெரி பெரியோய்
நென்னலிற் கண்ட பொருளெலாம் நினைவேன்
நின்னருள் வழியினை யினிதோர்
தன்னலி லடையச் செய்தெனை யாள்வாய்
கருணையா னந்தசற் குருவே. (27

மண்ணினின் மாயோர் மற்றுளார் யாரும்
வருடங்கள் தவிர்கிலா தயர்ந்த
விண்ணினுங் கிடையா வமுதெனு மடிசில்
விதவிதக் கறியுடன் படைத்து
எண்ணினுக் கடங்கா வன்னதானஞ் செய்
தேத்திநின் றுருகியே நோக்குங்
கண்ணினுக் கடங்காச் சோதியா யிலங்குங்
கருணையா னந்தசற் குருவே. (28)

வண்டுணு மதுவை மலரரு கிருந்தும்
மாந்துதல் தவளைக்கங் கில்லை
உண்டுமென் றிருப்பார்க் குண்டுநீ யருகி
லுறினுமங் கறிகிலா ரறியார்
தொண்டுகள் புரிவா ரடையுநற் கதியாய்ச்
சுகானந்த மாம்பர நிலையைக்
கண்டுகண்டுவகை கொண்டுவீற் றிருக்குங்
கருணையா னந்தசற் குருவே. (29)

பூவளஞ் சிறக்கப் புயல்வளஞ் சிறக்கப்
போதகன் னிலையினை யளிக்கும்
பாவளஞ் சிறக்கப் பசுவளஞ் சிறக்கப்
பக்தர்கள் குலமெலாஞ் சிறக்கக்
கோவளஞ் சிறக்கத் தண்ணருள் புரிவாய்
கூறுமெய்ப் பிரமமா யென்றுங்
காவளஞ் சிறக்குஞ் சாலியூ ரமர்ந்த
கருணையா னந்தசற் குருவே. (30)

வேறு.

அருணிலை பெறவே யென்று மன்னதா னங்கள் செய்யும்
திருநிலை யவர்கள் வாழி தேவர்மா முனிவர் வாழி
தருநிழல் செறியுஞ் சீதச் சாலியூ ரமரு மெங்கள்
கருணையா னந்த சாமி கழலிணை வாழி மாதோ.

முற்றிற்று.

ஷ

விளம்பரம்.

இப் புத்தகம் வேண்டியவர்கள், விருதுபட்டி, மகா-ள-ள-ஸ்ரீ அ கந்த சாமிக் கவிராய ரவர்களிடத்தில், பெற் றுக்கொள்ளலாம்.

கூடிய சீக்கிரம் கருணையானந்த சுவாமிகள் பஜனைக் கீர்த்தனை அச்சிட்டு வெளிவரும்.